## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi*
## *CC.No.199/2022 – P.W. 4 (LW2)*

| | |
|---|---|
| *Name* | செந்தில் - துணை வட்டாட்சியர் நீடாமங்கலம் |
| *Father/Husband's Name* | திருஞானசம்பந்தம் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 42 |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 05.02.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது நீடாமங்கலம் தாலுக்காவில் துணை வட்டாட்சியராக வேலை பார்த்து வருகிறேன்.

கடந்த 26.06.2019 ம்தேதியன்று இரவு 11.00 மணியளவில் முக்குளம் சாத்தனூர் மணல் அள்ளுவதாக தகவல் கிடைத்தது. அந்த சமயம் நானும், மண்டல துணை வட்டாட்சியர் ஜெயபாஸ்கர், சேவகொடையான் கிராம உதவியாளர், செந்தில் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முக்குளம் சாத்தனூருக்கு சென்றோம். வண்டியின் தடத்தை பார்த்துக்கொண்டே செந்தில் முதலாவதாக சென்றார். அப்போது மூன்று நபர்கள் அவரை தாக்கினார்கள். ஆஜர் எதிரிகள் தான் அவரை தாக்கினார்கள். அதன்பிறகு செந்தில் வடுவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்று கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் செந்திலை தாக்கிய விபரத்தை சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

அவருக்கு எங்கு எங்கு காயம்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். சம்பவ நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். அசா. 1 செந்தில் முக்குளம் சாத்தனூரை சேரந்தவர் என்றால் சரிதான். நாங்கள் மூவரும் காரில் இருந்து கொண்டு செந்திலை அனுப்பி பார்க்க சொன்னோம் என்றால் சரிதான். செந்தில் என்பவர் மூன்று பேர் சென்ற தடம் இருப்பதாக சொன்னார். நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை. இந்த மூன்று பேரின் பெயரையும் செந்தில் தான் என்னிடம் தெரிவித்தார். எனக்கு நேரடியாக தாக்கிய விபரம் தெரியாது.

நான் சம்பவ இடத்திற்க்கே செல்லவில்லை என்றும், நான் காரிலே இருந்து கொண்டு, செந்தில் சொன்ன விபரதைதை வைத்துக்கொண்டு எதிரிகளை தொடர்புபடுத்தி பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.